JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-7 Witness
for Prosecution

| CC.No. | 38/2024 | Crime No. | 132/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **PW7–ரகுநாத்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | |

**1ம் தேதி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச.317 மனு அளிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் எடப்பாடியில் குடியிருந்து கொண்டு, கல்லூரி படிப்பை முடித்துவிட்டு போட்டி தேர்வுக்காக தயாராகி வருகிறேன். இந்த வழக்கின் 2ம் எதிரி நிஜார் அலி பேக்கரிக்கு போய் வந்த வகையில் எனக்கு பழக்கமானார். நிஜார் அலி என்னிடம் அவரது தேவைக்காக அப்பப்போது TN 52 AA 4289 என்ற பதிவெண் கொண்ட எனது ஸ்ப்ளெண்டர் வண்டியை வாங்கி செல்வா. தேதி, மாதம், நினைவில்லை, சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு மார்ச் மாதத்தில் ஒரு நாள் காலையில் நிஜார் அலி என்னிடம் தனது பெரியம்மாவை பார்ப்பதற்காக ஊருக்கு செல்வதற்காக பைக் வேண்டும் என்று கூறி எனது பைக்கை வாங்கிவிட்டு அன்றைய தினம் மாலையிலேயே பைக்கை திருப்பி தந்து விட்டா. மீண்டும் 10 நாட்கள் கழித்து நிஜார் அலி என்னிடம் ஊருக்கு செல்வதற்காக எனது பைக்கை வாங்கி சென்றார். அதற்குப் பின்பு சுமார் ஒரு 10 நாட்கள் கழித்து நிஜார் அலியை போலீசார் கைது செய்து எனது வீட்டிற்கு அழைத்து வந்திருந்தார்கள். அப்போது எனது வண்டியையும் எடுத்து வந்திருந்தார்கள். போலீசார் என்னை நிஜார் அலியை அடையாளம் தெரியுமா என்று கேட்டார்க. நான் தெரியும் என்று கூறினேன். எனது வண்டியை தெரியுமா என்று கேட்டார்கள். அது எனது வண்டி என்று நான் அடையாளம் காட்டினேன். அப்போது போலீசார் என்னிடம் நிஜார் அலி இந்த வண்டியை பயன்படுத்தி பவானியில் ஒரு பெண்மணியிடம் செயினை அடித்துச் சென்றதாகவும், அது குறித்து உனக்கு தெரியுமா என்று கேட்டார்கள். எனக்கு அது குறித்து தெரியாது என்றும் ஊருக்கு செல்வதற்காக பைக் வேண்டும் என்று கூறி என்னிடம் பைக்கை நிஜார் அலி பெற்றுச் சென்றார் என்று கூறினேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:49:37 +0530

**எதிரிகள் தப்பின் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன வாகனம் என்னுடையதுதான் என்பதற்கு எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், நான்தான் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டிச் சென்று, எனது வாகனத்தை போலீசார் பறிமுதல் செய்து வைத்திருந்தார்கள் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால், சரிதான். நான் சொல்வது போல், சம்பவம் நடைபெற்று இருந்தால் உரிய மனு தாக்கல் செய்து எனது வாகனத்தை நான் பெற்றிருப்பேன் என்றால், சரியல்ல. நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியில்லை.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:49:44 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-8 Witness
for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 38/2024 | Crime No. | 132/2024 | Station | Bhavani |

| | | |
|---|---|---|
| Name | **PW8–அருண்குமார்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 28th day of January 2026 | | |

**1ம் தேதி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச.317 மனு அளிக்கப்பட்டு, நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் எடப்பாடியில் குடியிருந்து கொண்டு ,தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 10 ரகுநாத் எனக்கு தம்பி முறையாவார். அவருக்கு இந்த வழக்கின் 2ம் எதிரி நிஜார் அலி நண்பர் ஆவார். அதன் மூலமாக நிஜார் அலி எனக்கும் நண்பர் ஆனார். நிஜார் அலி என்னிடம் அடிக்கடி கைமாற்று பணம் கேட்பார். நானும் கொடுப்பேன். தேதி,மாதம், நினைவில்லை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நிஜார் அலி என்னிடம் வந்து ஒரு தங்க சங்கிலியை கொடுத்து அது தனது அம்மாவுடையது என்றும் அதை என்னுடன் வைத்திருக்குமாறும் கொடுத்தார். பிறகு நிஜார் அலி என்னிடம் செயின் கொடுத்ததற்கு ஒரு வாரம் கழித்து பவானி காவல் ஆய்வாளர் எனது வீட்டிற்கு வந்து நிஜார் அலி கொடுத்த செயினை கொடுக்குமாறு கேட்டார். நானும் ஆய்வாளரிடம் திருப்பி கொடுத்து விட்டேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் போலீசார் எனக்கு சொல்லித் தான் தெரியும் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல நிஜார் அலி எனது நண்பர் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றார், சரியல்ல. நான் முதல் விசாரணையில்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:49:51 +0530

சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் என்னிடம் எந்த நகையும் போலீசார் கைப்பற்றவில்லை என்றால், சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.28 06:49:57 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.